தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புதன்கிழமை, 1979 மார்ச் 14.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1, வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

திருமங்கலம், உசிலம்பட்டி பகுதிகளில் பாசன வசதிகள்.

குறுகிய கால வினா எண் 13 திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வைகை—பெரியாறு சீர்திருத்தத்தின் மூலம் உபரியாக கிடைக்கிற சுமார் 40,000 ஏக்கருக்கு பாயக்கூடிய தண்ணீரை திருமங்கலம் உசிலம்பட்டி தாலுகாவில் உள்ள சுமார் 20,000 ஏக்கர் நிலங்களுக்காவது தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதா?

(ஆ) அப்படியானால் அதன் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு.—

(அ) & (ஆ): ஆம். பெரியாறு-வைகை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கிடைக்கும் உபரி தண்ணீரை, திருமங்கலம் வட்டத்தில் 3817 ஏக்கர் நிலங்களுக்கும், உசிலம்பட்டி வட்டத்தில் 1268 ஏக்கர் நிலங்களுக்கும் கூடுதலாகப் பாசன வசதி அளிக்க ஏற்பாடு செய்யுமாறு ஆணையிடப்பட்டது.

திரு. கே. கந்தசாமி: தலைவர் அவர்களே, திருமங்கலம் தாலுகா, உசிலம்பட்டி தாலுகா என்று இரண்டாகப் பிரிக்கப்பட்ட பகுதிகளில் வாழ்கிற பிரமலைக் கள்ளர் வகுப்பினருக்கு—குற்றப்பரம்பரையினர் சட்டத்தின்கீழ் ஆங்கிலேயர் காலத்தில்

செய்யப்பட்டது—நல்லமுறையில் வாழ்க்கைவசதிகளை ஏற்படுத்த இந்த வைகை அணைக்கட்டுத்திட்டம் உருவாக்கப்பட்டு, —1928-ம் ஆண்டில் உருவாக்கப்பட்டு—1956-ல் இந்தத்திட்டம் நிறைவேற்றப்பட்டது. அன்றையதினம் ஆட்சிப்பொறுப்பில் இருந்தவர்கள் அரசியல் காரணங்களுக்காக அந்தப் பகுதிகளிலுள்ள பெரும்பகுதி மக்களுக்குத் தண்ணீர் கொடுக்காமல் வேறு பகுதிகளுக்கு அந்தத் தண்ணீரை எடுத்துச்சென்று அதற்குப் பின்னால் வந்தவர்கள் பல காரணங்களுக்காக அந்தப் பகுதி மக்களுக்குத் தண்ணீர் கொடுக்காமலிருந்ததும் நியாயத்திற்கு விரோதமானதாகும். ஆகவே வைகை—பெரியாறு சீர்திருத்தத்தின் மூலமாக உபரியாகக் கிடைக்கிற 40,000 ஏக்கருக்குப் பாயக்கூடிய தண்ணீரை திருமங்கலம், உசிலம்பட்டி தாலுகாக்களில் உள்ள சுமார் 20,000 ஏக்கர் நிலங்களுக்காவது அளித்தால் அங்குள்ள வறட்சி நிலையைப் போக்கி அங்குள்ள மக்களுக்கு நீதி செய்வதாகும் என்ற அடிப்படையில்தான் முதல் அமைச்சர் அவர்களிடமும் விவசாயத் துறை அமைச்சர் அவர்களிடமும் பல மனுக்கள் கொடுக்கப்பட்டு இதே சட்ட மன்றத்தில் நானும் இது பற்றிப் பேசியிருக்கிறேன். அப்படியிருந்தும் முன்னால் கொடுக்கப்பட்ட தண்ணீர்தான் கொடுக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். ஆகவே இது மறுபரிசீலனை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருக்கக்கூடிய தொகுதியின் பக்கத்தில் இருக்கக்கூடிய திருமங்கலம் போன்ற தொகுதிகளிலும் பாசன வசதியை அதிகரிக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு மட்டுமல்ல, அங்குள்ள மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடும் அவர்கள் கொடுத்த மனுக்கள்பேரில் பரிசீலனை செய்துதான் இன்று ஏறத்தாழ ஆயிரம் ஏக்கருக்கு அதிகமாகப் பாசனவசதி கொடுத்திருக்கிறோம், மேலும் பாசன வசதியை அதிகரிக்க வேண்டுமென்றால் இத்திட்டத்திற்காக தண்ணீர் கொண்டு செல்வதில் ஏற்படுகிற சேதாரத்தைக் குறைக்கும் வகையில் பெரியாறு—வைகை பாசனத் திட்டம் நவீனமயமாக்கப்படயிருக்கிறது. இதற்காக உலக வங்கியின் உதவியோடு ரூ. 41 கோடி அளவில் இந்தத்திட்டம் இன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் 18,760 ஹெக்டேர் பாசனவசதி பெறுமளவில் இத்திட்டமிருக்கிறது. மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற நல்ல யோசனையை மனதில்கொண்டு அப்பகுதி மக்களுக்கு எவ்வளவு தூரம் அதிகத் தண்ணீர் கொடுக்க முடியுமோ அது ஆலோசிக்கப்படும்.

திரு. என். லட்சுமிநாராயணன்: இந்த வைகை—பெரியாறு சீர்திருத்தத்தில் இருக்கக்கூடிய உபரிதண்ணீரில் மதுரை மாநகர மக்கள் குடிநீருக்காக கஷ்டப்படுவதை மனதில்கொண்டு அதில் ஓரளவு ஒதுக்கப்படுமா?

1979 மார்ச் 14]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : குடிநீருக்காக உள்ள திட்டம் இதுவரையிலும் இல்லை. இதை எப்படி உபயோகிப்பது என்பதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. செ. சிவசாமி : திருமங்கலம் தாலுகாவிற்குத் தண்ணீர் கொடுப்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், வரவேற்கிறோம். அதே நேரத்தில் அந்தத் தண்ணீர் வைகை ஆயக்கட்டிலிருந்து எடுக்கப்படுவதாகத் தெரிகிறது. கிழக்கு முகவை மாவட்டம் முழுவதும் வைகை தண்ணீரை எதிர் பார்த்திருக்கிறோம். ஆகவே அந்தப் பகுதிகள் வரண்டுவிடாமல், ஏற்கனவே வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வரக்கூடிய தண்ணீரை தடுத்துவிடாமல் அந்தத் தண்ணீர் நிச்சயமாகக் கொடுக்கப்படும் என்பதற்கு காரண்டி தரப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஏற்கனவே நான் சொன்னதுபோல் வைகை—பெரியாறு திட்டம் மூலம சேதாரத்தைத் தவிர்ப்பதைப் பொறுத்துத்தான் நவீனமய மாக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆகவே உபரித் தண்ணீரைக் கொண்டுதான் மேலும் பாசனவசதியை அதிகரிக்க வேண்டுமே தவிர வைகையிலிருந்து தண்ணீர் எடுத்து ஏற்கனவே பாசனவசதி பெற்றுக் கொண்டிருக்கக்கூடிய நிலங்களைப் பாழடிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : திருமங்கலம், உசிலம்பட்டி பகுதிகள், வரலாற்றுக் காரணங்கள் எவ்வாறிருந்தாலும் இன்று மதுரைமாவட்டத்தில் கடுமையான வறட்சிப் பகுதிகளாக அவை இருக்கின்றன. அந்தப் பகுதியில்தான் இந்த அணை கட்டப்படுகிறது. ஆகவே அவர்களுக்கு முன் உரிமை கொடுக்க முயற்சி செய்து வைகை—பெரியாறு சீர்திருத்தத்தின் மூலம் கிடைக்கும் உபரி தண்ணீரை 10,000 ஏக்கருக்காவது கொடுக்க அரசு முயற்சிக்குமா என்ற வாக்குறுதியைப்பெற விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சேதாரத்தைத் தவிர்க்கும்பொருட்டு, நவீனப் பணிகள் மூலமாகச் சீரமைப்புத் திட்டத்தின் மூலமாக ஏறத்தாழ 40 ஆயிரம் ஏக்கர் புதிய பாசனம் பெறும். அந்த 40 ஆயிரம் ஏக்கர் எந்தெந்த தாலூக்காக்களில் வறட்சி மிகுந்திருக்கின்றதோ அந்த இடங்களிலும், விவசாயப் பெருங்குடி மககளுக்கு உதவி கிடைக்கின்ற வகையிலும் இந்தப் பாசனம் அமையவேண்டும் என்பதை உத்தேசித்துத்தான் இந்தக் கணக்கு போடப்பட்டு வருகிறது. இன்னும் உபரியாக கிடைக்குமானால் அதையும் பாசனத்திற்காக உபயோகப்படுத்துவதற்கு- அதையும் அதிகப் படுத்துவதற்கு அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியாறு–வைகை சீரமைப்புத் திட்டத்தின் மூலமாகக் கிடைக்கின்ற உபரியாக கிடைக்கின்ற தண்ணீர் மூலமாக வறட்சிபிரதேசமாக இருக்கின்ற 7 ஆயிரம் ஏக்கர் பாசனம் பெறப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. மேலும் இப்போது 40 ஆயிரம் ஏக்கர் பொதுவாக பாசனம் பெறும் என்று சொல்லப்பட்டிருப்பதால், இதை (alternative) அல்டர்நேட்டிவ் முறையில்–அதாவது ஒரு போகத்திற்கு ஒரு பகுதியும், இன்னொரு போகத்திற்கு இன்னொரு பகுதியும் பலன் பெறுகின்ற வகையில் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின் ஆயக்கட்டுகளுக்குக் கொடுப்பது போல் இங்கும் கொடுப்பதற்கு செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, தேனி தொகுதியைப் பொறுத்தவரையில், ஏற்கனவே அங்குள்ள பி. டி. ராஜன் வாய்க்கால் மூலமாக அதிகமான அளவில் பாசனம் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது, மேலும் அந்தப் பகுதியில் பாசனத்தை அதிகப்படுத்துகின்ற அளவில் வைகை–பெரியாறு சீரமைப்புத் திட்டத்தின் மூலமாகக் கிடைக்கின்ற தண்ணீரை, பரம்பிக்குளம்-ஆளியாறு பகுதிகளில் கொடுக்கப்பட்டு வருவதைப்போல் தண்ணீர் கொடுக்க ஆரம்பித்தால், ஏறத்தாழ 2, 3 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் தண்ணீர் கொடுக்கவேண்டிய சூழ்நிலை இங்கு ஏற்படும். ஆகவே இப்போது இருக்கின்ற முறையிலேயே தண்ணீர் கொடுக்க முன் வந்தால்தான் அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மிக உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Oil exploration in Thittacheri

* Q No. 380– THIRU S. J. SADIQ PASHA: Will the Hon. Chief Minister be pleased to state

(a) whether the Oil and Natural Gas Commission is engaged in oil exploration in Tamil Nadu;

(b) whether it is a fact that in the well known as 'Karaikal 10' oil is struck in Thittacheri in Thiruchy district, and

(c) whether the Government are aware that Oil and Natural Gas Commission has a proposal to move the staff and the machinery engaged in oil exploration from Thittacheri to Rajamandry?